1983 மார்ச் 29]

டாக்டர்கள் எத்தனை பேர்? அவர்கள் படிப்பதற்கு வேண்டிய உதவித் தொகை ஏதேனும் இப்போது அளிக்கப்பட்டு வருகிறதா? மற்றொன்று, அந்தக் கல்லூரியிலே படிக்கக்கூடிய ஆண்டுகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. DR. H. V. HANDE: Sir, the number of students admitted—class-wise என்ற ஒரு விவரம் இருக்கிறது. இப்பொழுது I year எடுக்கப்படவில்லை. II year 27, III year 22, IV year 50. A stipend of Rs. 175 is being paid for the period of Internship Training to each student who undergoes Internship Training with the Government Homeopathy Medical College.

என்று ஸ்டைபண்ட் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒட்டு மொத்தமாக இரண்டு வகையான டாக்டர்களிலேகூட இந்த முறைப்படி படித்து வரக்கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பொதுவாக ஏற்கனவே படித்தவர்களுக்கு நாம், ஒரு சட்டத்தின் கீழே அனுமதி கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் நடத்தப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சை முகாம்கள்.

*வினா எண். 587—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும், மாதந்தோறும் கருத்தடை அறுவை சிகிச்சை முகாம்களை மீண்டும் நடத்தும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் மாவட்டந்தோறும் தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களின் கூட்டுச் சேர்க்கையுடன் கருத்தடை அறுவை சிகிச்சை சிறு முகாம்கள் 1983 மார்ச்சு திங்கள் இறுதிவரையில் நடத்தி மாவட்ட குறியீட்டினை அடையும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு எத்தனை பேருக்கு குடும்பக்கட்டுப்பாடு செய்யவேண்டுமென்று அரசு இலக்கு வைத்துள்ளது. அந்த இலக்கை எட்டிவிட்டதா? இதுவரை எத்தனை பேருக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, ஏறத்தாழ, 4, 5 ஆண்டுகளிலே, சென்ற ஆண்டுதான் 1,82,000 இலக்கு வைத்து, 1,88,828-ஐ நாம் எட்டியிருக்கிறோம்.

100 சதவிகிதத்திற்கும் மேலே. இந்த ஆண்டு 2,92,000 இலக்கை மத்திய அரசாங்கம் வைத்திருக்கிறார்கள். 20-3-83 அன்று வரை, 2,52,499 பேருக்கு நாம் அறுவை சிகிச்சை செய்திருக்கிறோம். இந்த ஆண்டு முழுமையாக 100 சதவிகிதத்திற்கும் நம்முடைய இலக்கினை எட்டக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நமது நாடு ஏழை எளிய நாடு. குடும்பக்கட்டுப்பாடு செய்யும் பெண்களுக்கு ரூ.200 தான் கொடுக்கப்படுகிறது ஆகவே அதை ரூ. 1 000 ஆக உயர்த்துவதற்கும், அதோடு ஏதாவது சில பொருள்களைக் கொடுப்பதற்கும், அரசு ஆவன செய்யுமா? இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் செய்யும் இடங்களிலே நடிகைகளை வைத்து பிரச்சாரம் செய்தால், மக்கள் மத்தியில், மனதில் நன்கு பதியும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகைகளை வைத்து நாடகங்களை நடத்திக்கொண்டு இருக்கிறோம். தங்வேல் அவர்களை வைத்து ஏறத்தாழ 10, 12 குடும்பக் கட்டுப்பாடு நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து பெற்ற அந்தத் தொகையை மானியமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு 105 ரூபாய் மானியமாக கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இப்போது புதிதாக மத்திய அரசினுடைய பரிந்துரையின் பேரில் 5 ஸ்டேட் லாட்டரி டிக்கெட்டுகள், அடுத்த டிராவிலிருந்து, அந்த அறுவைச் சிகிச்சையை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு குடும்பக் கட்டுப்பாடு மிக அவசியமான திட்டமாகும். ஆகவே 2 குழந்தைகள் பெற்ற அத்தனை பேருக்கும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கு அரசு உறுதியான ஒரு ஆணையைப் பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் சார்பாக எல்லா மாநிலங்களையும் ஒருங்கிணைந்து ஒரு திட்டத்தை ஏற்படுத்தி செயல்படுத்திக் கொண்டு வருகிறது. ஆகவே இதிலே தனியாக ஒரு மாநிலம் மட்டும் முடிவு எடுத்துக்கொள்ள முடியாது. மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரையின் பேரில் அவர்கள் ஆணையிடுகிறார்கள்

1983 மார்ச் 29)

மானிட்டர் செய்கிறார்கள். எப்படி எல்லாம் இது நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 3 குழந்தைகளுக்கு மேல் Three children are above. உள்ள அந்தத்தாய்மார்களுக்கு அல்லது பெற்றோர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு நாம் திட்டமிட்டு வருகிறோம்.

கஞ்சனூர் ஊராட்சியிலுள்ள மருத்துவமனை.

*வினா எண். 588—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஒன்றியம் கஞ்சனூர் ஊராட்சியில் உள்ள மருத்துவமனைக்கு மருத்துவர் நியமிக்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடன் மருத்துவர் நியமிக்கப்பட அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தகுதிபெற்ற மருத்துவர் கிடைக்காத காரணத்தால் இப்பதவியை இதுகாறும் நிரப்ப முடியவில்லை.

அய்யம்பேட்டை நகரில் பரவிவரும் யானைக்கால் நோய்.

*வினா எண். 589—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் ஒன்றியம் அய்யம்பேட்டை நகரில் யானைக்கால் நோய் அதிகமாகப் பரவி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் நோயைத் தடுக்க அரசின் தீவிர திட்டம் என்ன?

(இ) இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஈ) அதில் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?